

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப.,அவர்கள்,
தட்டமை ருபெல்லா தடுப்பூசி முகாமினை, நாகர்கோவில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பள்ளியில்
இன்று (06.02.2017) தொடங்கி வைத்தார். துணை இயக்குநர் (சுகாதார பணிகள் (பொ)) மரு. எஸ்.செந்தில்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 97/2017 நாள்: 06.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர்திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப.,அவர்கள், தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாமினை இன்று (06.02.2017) தொடங்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர்திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப.,அவர்கள், தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாமினை, நாகர்கோவில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பள்ளியில் இன்று (06.02.2017) தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:-

இந்திய அரசு 06-02-2017 முதல் 28-02-2017 வரை 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள்/ மாணவர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் தட்டம்மை ருபெல்லா (Measles Rubella) தடுப்பூசி போடப்பட திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக, இது தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி, லட்சத்தீவுகள் மற்றும் கோவாவில் நடத்தப்பட உள்ளதாகவும், இந்த தட்டம்மை - ருபெல்லாவால் ஏற்படும் நோய் மற்றும் இறப்பு விகிதத்தை குறைப்பதே இதன் நோக்கமாக இருக்கும் என அரசால் தெரிவிக்கப்பட்டது.

9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, இதற்கு முன் இவ்வகை ஊசி போடப்பட்டிருந்தாலும் தடுப்பூசி முகாம் நடைபெறும் நாட்களில் தடுப்பூசி போடப்பட வேண்டும் எனவும், பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளி, தனியார், உறைவிடப் பள்ளிகளிலும், பள்ளி செல்லா குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும் மற்றும் சிறப்பு தடுப்பூசி மையங்களிலும் தட்டம்மை - ருபெல்லா தடுப்பூசி போடப்படும். ஒவ்வொரு பள்ளிகளில் உள்ள ஒருங்கிணைப்பு ஆசிரியர் மூலம், இப்பணி சுமூகமாக செயல்படுத்தப்படும்.

தற்போது உள்ள தடுப்பூசி அட்டவணையின்படி, தட்டம்மை முதல் தவணை 9 மாதம் முடிந்த குழந்தைகளுக்கும், தட்டம்மை இரண்டாம் தவணை 16-24 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கும் போடப்படுகிறது. அது மார்ச் மாதம் முதல் மாற்றப்பட உள்ளது. அதாவது தட்டம்மை - ருபெல்லா தடுப்பூசி முகாம் முடிவடைந்த, பிறகு தற்போது உள்ள தட்டம்மை தடுப்பூசி (Measles) தட்டம்மை ருபெல்லா இணைந்த ஒரே தடுப்பூசியாக மாற்றப்படும்.

தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாம் நான்கு வாரங்களாக பிரித்து நடைபெற உள்ளது. முதல் வாரம் அனைத்து பள்ளிகளிலும், இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரம் பள்ளி செல்லா குழந்தைகளுக்கும், நான்காம் வாரம் தடுப்பூசி போடாமல் விடுபட்ட குழந்தைகளுக்கும் போட ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

இவ்வகை ஊசி 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், ஒருமுறை உபயோகிக்கப்படும் ஊசியினைக் கொண்டு 0.5 ML அளவு வலது கையில் உள்ள தோலுக்கு அடியில் நன்கு பயிற்சி பெற்ற கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் போடப்படும்.

தடுப்பூசி முகாமிற்காக அனைத்து மருத்துவர்கள் மற்றும் பாரா மெடிக்கல் பணியாளர்கள் அனைவருக்கும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் (Cold Chain) தடுப்பூசி முகாம்களுக்கு எடுத்து செல்லப்படும்.

நமது மாவட்டத்தில், மொத்தம் 1,224 பள்ளிகள்,1,401 சத்துணவு மையங்களில் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. மேலும், இம்முகாம்கள் மூலம் 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள 4,44,603 பள்ளி செல்லக் கூடிய மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகள் பயன் அடைவார்கள். இந்த தடுப்பூசி முகாம், போலியோ முகாமைபோல் வீடு வீடாக சென்று போடப்பட மாட்டாது.

எனவே, இம்முகாம் நடைபெறும் நாட்களில், பெற்றோர்கள் தங்கள் 9 மாதம் முதல் 15 வயது வரை உடைய குழந்தைகளுக்கு மறவாமல் தடுப்பூசி போட்டுக் கொண்டு, நோயற்ற வாழ்வை வாழ முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதார பணிகள் (பொ)) மரு. எஸ்.செந்தில்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.கே.வீரேஷ்வரன் நாயர், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.பேச்சியம்மாள், நாகர்கோவில் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் (பொ) திரு.நட்ராஜன், உதவி இயக்குநர் (புள்ளியியல்) திருமதி.சுந்தரவேலவள்ளி, மரு.மாதவன் பிள்ளை, நாகர்கோவில் நகராட்சி மருத்துவ அலுவலர் மரு.கிங்ஷால், திரு.வினோத், தலைமையாசிரியர் திருமதி.ஏ.நல்லபாக்கிய லெட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.